புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 225 | 19-02-2026 | வியாழன் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volum 01 | Issue: 225 | 19-02-2026 | Thursday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry

## மார்ச் 16ல் மாநிலங்களவை தேர்தல்: தமிழகத்தில் காலியாகும் 6 இடங்கள்!

தமிழகத்தில் காலியாகும் 6 மாநிலங்களவை எம்.பி. உள்பட 37 எம்.பி. பதவிகளுக்கு மார்ச் 16ல் தேர்தல் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,10 மாநிலங்களில் 37 மாநிலங்களவை எம்.பி. பதவிகளுக்கு வரும் மார்ச் 16ம் தேதி தேர்தல் நடைபெறும். பிப்.26ம் தேதியன்று இதற்கான அறிவிக்கை வெளியாகும். வேட்புமனுக்கள் தாக்கல் அன்றைய தினமே தொடங்கும். மார்ச் 5, வேட்புமனு தாக்கல் செய்ய கடைசி நாள். மார்ச் 9ல் வேட்புமனுக்கள் வாபஸ் பெற கடைசி நாள். வாக்கு எண்ணிக்கையானது வாக்குப் பதிவு நாளிலேயே நடைபெறும், என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் 26ம் தேதியுடன் 37 மாநிலங்களவை எம்.பி.க்களின் பதவிக் காலம் முடிவடையும் நிலையில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

தமிழகத்தில் 6 எம்.பி.க்கள் பதவி.. தமிழகத்தில் திமுகவின் திருச்சி சிவா, என்.ஆர்.இளங்கோ, பி.செல்வராசு, கனிமொழி என்விஎன் சோமு, அதிமுகவின் தம்பிதுரை, அதிமுக கூட்டணியில் உள்ள தமாகவின் ஜிகே வாசன் உள்ளிட்டோரின் பதவிக் காலம் முடிவடைகிறது. இதனால், திமுக 4 எம்.பி.க்கள், அதிமுக 2 எம்.பி.க்களை நிறுத்த வேண்டும்.

தமிழகத்தில் விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் காலியாக உள்ள 6 மாநிலங்களவை எம்.பி. பதவிகளுக்கு தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டப்பேரவைத் தேர்தலுக்கான கூட்டணியே இழுபறியாக இருக்கும் நிலையில் மார்ச் 16 மாநிலங்களவை எம்.பி.க்கள் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ளதால் இது திமுக, அதிமுகவுக்கு சீட் ஒதுக்குவதில் நெருக்கடியை ஏற்படுத்தக்கூடும் என்று கணிக்கப்படுகிறது.

# அனைத்து மாநிலங்களும் இணைந்து நடத்தும் கூட்டாட்சியாக மத்திய அரசு இருக்க வேண்டும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை: பிப்.19–

"அனைத்து மாநிலங்களும் இணைந்து நடத்தும் கூட்டாட்சியாக மத்திய அரசு இருக்கவேண்டும்.கூட்டாட்சிக்கு முக்கியத்துவம் தரும் வகையில், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை திருத்த வேண்டும். மத்திய அரசும் மாநில அரசும் போட்டியாளர்கள் அல்ல. இருவரும் பொது அமைப்பின் பங்குதாரர்கள்," என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.



2026 – 2027 ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் இடைக்கால பட்ஜெட்டை நேற்று அமைச்சர் தங்கம் தென்னரசு சட்டப்பேரவையில் தாக்கல் செய்தார். இதையடுத்து வேளாண் பட்ஜெட்டை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தாக்கல் செய்தார்.

இதன் தொடர்ச்சியாக,நேற்று தாக்கல் செய்யப்பட்ட இடைக்கால பட்ஜெட் மீதான விவாதம், நேற்று முன்தினம் சட்டப் பேரவையில் நடைபெற்றது. அப்போது முதல்வர் ஸ்டாலின் பேசும் போது, "முன்னாள் முதல்வர் அண்ணா, தனது இறுதி உயிர் போல எழுதியது தான் மாநில சுயாட்சி கொள்கை. அவரது மறைவுக்குப் பிறகு மாநிலத்தில் சுயாட்சி, மத்தியில் கூட்டாட்சி என்பதை ஐம்பெரும் முழக்கங்களில் ஒன்றாக கருணாநிதி வடிவமைத்து கொடுத்தார்.

மத்திய மாநில அரசுகளின் உறவுகள் குறித்த உயர்நிலைக் குழுவின் அறிக்கையின் முதல் பகுதியை சட்டப்பேரவையில் வைக்க இருக்கிறோம். ஒன்றிய அரசிடம் இருந்து உரிமைகளை பெற இன்னமும் போராடும் நிலை உள்ளது; எல்லாவற்றுக்கும் மாநில அரசுகள் ஒன்றியத்தின் தயவை எதிர்பார்த்துள்ள நிலைதான் உள்ளது.

அனைத்து அதிகாரங்களையும் தன்வசம் வைத்துள்ள மத்திய அரசு மாநில அரசுகளை மதிப்பது இல்லை. இன்னும் எத்தனை காலங்கள் அவர்கள் கொடுக்கும் இடத்திலும், நாம் வாங்கும் இடத்திலும் இருப்பது. அனைத்து மாநிலங்களும் இணைந்து நடத்தும் கூட்டாட்சியாக ஒன்றிய அரசு இருக்கவேண்டும்.கூட்டாட்சிக்கு முக்கியத்துவம் தரும் வகையில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை திருத்த வேண்டும்.

மாநில சுயாட்சி வேண்டும், மத்தியில் கூட்டாட்சி மலர வேண்டும். இது தனிப்பட்ட அரசியல் கட்சியின் கோரிக்கை அல்ல, இந்திய மக்களின் வாழ்வியல் கோரிக்கை. பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவுக்கு கூட்டாட்சி தான் அடிப்படை. இதைத் தான் அந்த அறிக்கையும் நிறுவுகிறது. எனவே, இத்தகைய தன்மை கொண்டதாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை மாற்ற வேண்டும்.

கடந்த 76 ஆண்டுகளில் 106 முறை இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட்டுள்ளது. எனவே,நாம் முயன்றால் மீண்டும் திருத்த முடியும். இந்தியாவை முதிர்ச்சியடைந்த கூட்டாட்சி நாடாக மாற்றும் முயற்சியைத் தொடங்க வேண்டும். அதிகாரமும் வாய்ப்புகளும் ஒரே இடத்தில் குவிந்திருக்கக் கூடாது, பரவலாகவேண்டும். கூட்டாட்சி தன்மை கொண்ட தாக இந்திய அரசியலமைப்பை மாற்றுவது மத்தியஅரசைபலவீனப்படுத்தாது என்று அறிக்கை கூறுகிறது. ஆளுநர்கள் மூலமாக மாநில அரசுகளை செயல்பட விடாமல் தடுப்பது, ஜி.எஸ்.டி இந்தி திணிப்பு,தொகுதி மறுவரையறை உள்ளிட்ட பல்வேறு வழிகளில் அதிகாரங்களை கபளீகரம் செய்கிறது மத்திய அரசு.

மாநிலங்களவை மற்றும் மக்களவையில் இந்த கொள்கைக்கு ஆதரவு தெரிவிக்கும் ஜனநாயக சக்திகள் அதிகமாக இருக்கிறார்கள். எண்ணிக்கையாலும், எண்ணங்களாலும் அதிகமாக இருக்கிறார்கள். நாடு முழுவதும் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளுக்கும் இந்த அறிக்கை அனுப்பி வைக்கப்படும்.

மத்திய அரசும் மாநில அரசும் போட்டியாளர்கள் அல்ல. இருவரும் பொது அமைப்பின் பங்குதாரர்கள். மாநிலங்கள் வளர்ந்தால்தான் மத்திய அரசு வளரும். மாநில சுயாட்சிக்கான முன்னெடுப்பை நாம்தான் செய்ய வேண்டும். நம்மைவிட்டால் செய்ய யாரும் இல்லை. இது வரலாறு வழங்கி இருக்கும் வாய்ப்பு" இவ்வாறு முதல்வர் பேசினார்.



# சேலத்தில் இரண்டாக பிரிந்து கிடக்கும் திமுக'வினர் 11 தொகுதியை கைப்பற்ற அதிமுக'வினர் தீவிரம்.



சேலம். பிப். 19–

சேலத்தில்,திமுகவினர் 2 அணிகளாக பிரிந்து கிடப்பதால் வரும் சட்டமன்ற தேர்தலை எப்படி எதிர்கொள்வது என தெரியாமல் கட்சித் தலைமை கலக்கத்தில் உள்ளதாக கூறப்படும் நிலையில்,எந்த தொகுதியில் திரும்பினாலும் வெற்றி வாய்ப்பு தங்களுக்கு தான் என்ற நம்பிக்கையில் எடப்பாடி கே.பழனிசாமி இறங்கி வேலை செய்து வருகிறாராம்.

போட்டியில் உள்ள திமுகவே ஒரு விஷயம் இல்லையென்றால் அரசியல் களத்தில் நியூ என்ட்ரியான த.வெ.க.வை தண்ணீர் குடிக்க வைப்போம் என்று, அதிமுகவினர் கூறிவரும் நிலையில் வேட்பாளர் லிஸ்ட்டை வேகவேகமாக தயார் செய்து கொண்டிருக்கிறாராம் இபிஎஸ்.

வீரபாண்டி ஆறுமுகத்திற்கு பிறகு...

சேலத்தை பொறுத்தவரை ஒட்டுமொத்த நகரத்தையும் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தவர் தான் திமுக முன்னாள் அமைச்சர் வீரபாண்டி ஆறுமுகம். இவர் மறைந்த முன்னாள் முதலமைச்சர் கருணாநிதிக்கு மிக நெருக்கமானவர். தற்போதைய சுற்றுலாத் துறை அமைச்சர் பனமரத்துப்பட்டி ராஜேந்திரனுக்கும், வீரபாண்டி ஆறுமுகத்திற்கும் ஆரம்பகாலத்தில் இருந்தே ஆகாது. வீரபாண்டி ஆறுமுகம் தலைமைக்கு நெருக்கமாக இருந்ததால், ராஜேந்திரனை வளரவிடாமல் தடுத்ததோடு கட்சியில் அவருக்கு முக்கிய பொறுப்பு வழங்கவிடாமலும் சைலண்டாக முட்டுக்கட்டை போட்டதாக கூறப்பட்டது. ஆனாலும், தற்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுடன் ராஜேந்திரனுக்கு நெருக்கம் என்பதால் வீரபாண்டி ஆறுமுகம் மறைவிற்கு பிறகு சேலத்தில், ராஜேந்திரனின் கை ஓங்கியது. தொகுதியில் என்ன நடந்தாலும் தனது பார்வையை விட்டு அகலாதபடி ராஜேந்திரன் பார்த்துக்கொள்ள அவரது ஆதரவாளர்களுக்கே முக்கிய பொறுப்பும் வழங்கப்பட்டது. ஏற்கனவே வீரபாண்டி ஆறுமுகத்தின் மறைவுக்கு பின்னர் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு கட்சியில் பொறுப்பு வழங்காத கடுப்பில் இருந்த அவரது ஆதரவாளர்கள், ராஜேந்திரன் மீது கடும் அதிருப்பதியில் உள்ளதாக கூறப்படுகிறது.

இரண்டாக பிரிந்து கிடப்பதால்...

ஒரே கட்சியில் உள்ள முன்னாள் அமைச்சரின் ஆதரவாளர்களுக்கும், இந்நாள் அமைச்சரின் ஆதரவாளர்களுக்கும் இடையே ஒரு மறைமுக மோதல் வெடித்துக் கொண்டிருக்க, ராஜேந்திரனின் வலதுகரமாக பார்க்கப்பட்ட கன்னங்குறிச்சி குபேந்திரன் அண்மையில் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டார். அவர் தற்போது அமைச்சருக்கு எதிராக வெளிப்படையாக செயல்பட தொடங்கியுள்ளார். அதே போன்று முன்னாள் சேலம் மாநகர செயலாளர் ஜெயக்குமார் உள்ளிட்ட பல நிர்வாகிகளை அமைச்சர் ராஜேந்திரன் பகைத்துக் கொண்டதாக கூறப்படுகிறது. ஒரே கட்சியில் உள்ளவர்களே சேலத்தில் இரண்டாக பிரிந்து கிடப்பதால் வரும் தேர்தலை எதிர் கொள்வது பெரும் சவாலாகவே இருப்பதாக கூறப்படுகிறது.

11 சட்டமன்ற தொகுதி வேட்பாளர்களின் லிஸ்ட்

ஏற்கனவே கடந்த சட்டமன்ற தேர்தலில் சேலத்தில் உள்ள 11 சட்டமன்ற தொகுதிகளில் ஒரு தொகுதியை மட்டுமே திமுகவால் வெல்ல முடிந்தது. இப்படி உட்கட்சி பூசலால் சேலத்தில் திமுகவின் நிலை கவலைக்கிடமாக உள்ள நிலையில், இதுதான் தனக்கான சான்ஸ் என எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி நம்பிக்கைக்குரிய ஒரு புதுமுக நபரை தேர்தலில் களமிறக்க திட்டமிட்டுள்ளாராம். அதேபோல், கடந்த முறை பாமகவினர் 2 இடங்களில் வெற்றி பெற்றனர்.

தற்போது அந்த 2 இடத்தில்கூட அதிமுகவிற்கு பெரும் சிக்கல் இருக்க வாய்ப்பில்லையாம். பாமகவே இரண்டாக பிளவுபட்டு இருப்பதால் அதிமுகவிற்கு அங்கும் சாதகம்தான். கூட்டணியில் இருக்கும் அன்புமணி நிறுத்தும் வேட்பாளர் தேர்தலில் நிற்க சில நேரம் மாம்பழ சின்னம் ஒரு தடையாக இருந்தால், இரட்டை இலை சின்னத்திலேயே நிற்க வைத்துவிடலாம் என்ற திட்டத்தில் இருக்கிறாராம் இபிஎஸ். அதனால் தற்போதே 11 சட்டமன்ற தொகுதி வேட்பாளர்களின் லிஸ்ட்டை ஆர்வமாக தயார் செய்து வைத்துவிட்டாராம் எடப்பாடி பழனிசாமி.

வெற்றிக்கனியை கொடுத்துவிடுமா?

அதேபோல், அரசியல் களத்தில் நியூ என்ட்ரியான தமிழக வெற்றிக்கழகத்திலும் சேலத்தை பொருத்தமட்டில் தமிழன் பார்த்திபன் மட்டுமே முகம் தெரிந்த நபராக உள்ளார். அவருக்கு சேலம் தெற்கில் செல்வாக்கு அதிகம். விஜய் மக்கள் இயக்கமாக இருந்தபோது நலத்திட்ட உதவிகள் வழங்கியும், பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தியும் இளைஞர் பட்டாளத்தை தன்னுடன் வைத்துள்ள தமிழன் பார்த்திபன், கடந்த சில நாட்களாக மக்களை சந்திப்பது, அவர்களின் குறைகளை கேட்டறிவது என பல சுற்றி சுழன்று பணியாற்றி வருகிறார். இவைகள் எல்லாம் அவருக்கு கணிசமான வாக்குகளை பெற்றுத்தரலாமே தவிர வெற்றிக்கனியை கொடுத்துவிடுமா என்பது மிகப்பெரிய கேள்வியே என்கின்றனர் அதிமுகவினர். மொத்தத்தில் சேலம் தங்களுக்கு சாதகம் தான் பாதகம் இல்லை என்ற நம்பிக்கையில் உள்ளார்களாம் அதிமுகவினர். ஆனால், அரசின் உதவி திட்டங்கள் குறிப்பாக, தற்போது வழங்கிய 5 ஆயிரம் உதவித்தொகை இதெல்லாம் தங்களுக்கு கை கொடுக்கும் என்ற நம்பிக்கையோடு இருக்கிறார்களாம் அமைச்சர் தரப்பினர்.

# திருவள்ளூர் 5 வது புத்தகத் திருவிழாவில் அறந்தாங்கி நிஷா "சிரித்து வாழ வேண்டும்" என்ற தலைப்பில் கருத்தரங்கு




திருவள்ளூர் பிப் 19 :

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாக காலி மைதானத்தில் (வட்டார போக்குவரத்து அலுவலகம் எதிரில்) மாவட்ட நிர்வாகம், பொது நூலகத் துறை மற்றும் பபாசி இணைந்து நடத்தும் 5 வது திருவள்ளூர் புத்தகத் திருவிழா 2026 யில் நிகழ்ச்சி தொகுப்பாளர் கல்வியாளர் தன்னம்பிக்கை பேச்சாளர் ஈரோடு மகேஷ் "திரியின்றி எரியும் தீபங்கள்" மற்றும் அறந்தாங்கி நிஷா "சிரித்து வாழ வேண்டும்" ஆகிய தலைப்புகளில் கருத்தரங்கு நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாக காலி மைதானத்தில் (வட்டார போக்குவரத்து அலுவலகம் எதிரில்) மாவட்ட நிர்வாகம், பொது நூலகத் துறை மற்றும் பபாசி இணைந்து நடத்தும் 5 வது திருவள்ளூர் புத்தகத் திருவிழா 2026 யில் நிகழ்ச்சி தொகுப்பாளர் கல்வியாளர் தன்னம்பிக்கை பேச்சாளர் ஈரோடு மகேஷ் அவர்களையும் மற்றும் அறந்தாங்கி நிஷா ஆகியோரை மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ் நினைவு பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக பெருந்திட்ட வளாக காலி மைதானத்தில் (வட்டார போக்குவரத்து அலுவலகம் எதிரில்) மாவட்ட நிர்வாகம், பொது நூலகத் துறை மற்றும் பபாசி இணைந்து நடத்தும்5வதுதிருவள்ளூர் புத்தகத் திருவிழா 2026யினை திரளான பொதுமக்கள் மற்றும் மாணவர்கள் புத்தக கண்காட்சி அரங்குகளை பார்வை யிட்டனர்.

இதில் மாவட்ட வருவாய் அலுவலர் ச.சுரேஷ், தனித் துணை ஆட்சியர் பாலமுருகன், இணை இயக்குநர் (வேளாண்மை) செல்வராஜ், மாவட்ட நூலக அலுவலர் சரஸ்வதி, உதவி இயக்குநர் மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டு மையம் விஜயா, திருவள்ளூர் நகராட்சி ஆணையர் தாமோதரன், மற்றும் பல்துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தாய்மொழி வழி கற்றலே சிறந்தது: உலக தாய்மொழி தின விழாவில் புதுவை தமிழ்ச் சங்க தலைவர் வலியுறுத்தல்



திருமலை, பிப். 19–

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளார் ஒன்றியம் செட்டிக் குளம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மையம் சார்பில் உலக தாய்மொழி தின விழா கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்விற்கு பள்ளி தலைமை ஆசிரியர் தேவக்குமார் தலைமை தாங்கினார். ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா. சீனிவாசன், புலவர் ந.பானு ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆசிரியை பரிதா பேகம் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, புதுவை தமிழ்ச் சங்க தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து பங்கேற்று சிறப்புரை ஆற்றினார். தாய்மொழி கல்வியே வாழ்க்கையின் உயர்வுக்கு வழி வகுக்கும் என்று வலியுறுத்தினார். மேலும் இன்றைய சூழலில் குழந்தைகளுக்கு தமிழிலேயே பெயர் சூட்ட வேண்டும் என்றும் வலியுறுத்தப் பட்டது. இந்த நிகழ்வில் முன்னாள் தலைவர் அன்பு, முன்னாள் கவுன்சிலர் பாண்டு ரங்கன், பள்ளி மேலாண்மை குழு தலைவர் ராஜேஸ்வரி, துணைத் தலைவர் தரணி, கணினி ஆசிரியர் சுரேஷ், இயக்குநர் அருள் முருகன் ஆகியோர் வாழ்த்துரை வழங் கினார். மேலும் தாய்மொழி தின சிறப்பு உரையரங்கில் சிறப்பிடம் பெற்ற மாணவர்களுக்கு புத்தக பரிசுகள் வழங்கப் பட்டது. இறுதியில் பட்டதாரி ஆசிரியர் பரந்தாமன் நன்றி கூறினார்.

# பாஜக சார்பில் நாளை நமதே! தமிழ்நாடும் நமதே! சக்தி கேந்திர தெருமுனை கூட்டம்




கிருஷ்ணகிரி, பிப். 19–

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தலைவர் V.S.கவியரசு MBA தலைமையில், கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட துணை தலைவர் மற்றும் ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி சக்தி கேந்திர பொறுப்பாளர் தாமோதரன் அவர்கள், மண்டல் சக்திகேந்திர பொறுப்பாளர் பொன்ராஜ் மூர்த்தி அவர்களின் மேற்பார்வையில், ஊத்தங்கரை மத்திய மண்டல் தலைவர் வெங்கடேசன் மிட்டப்பள்ளி ஊராட்சி சக்தி கேந்திர பொறுப்பாளர் ரஜினி மற்றும் மிட்டபள்ளி ஊராட்சிக்குட்பட்ட மாநில, மாவட்ட, மண்டல, கிளை நிர்வாகிகள் அனைவரும் ஒருங்கிணைந்து ஏற்பாடு செய்யப்பட்ட நாளை நமதே! தமிழ்நாடும் நமதே! என்ற தெரு முனைப் பிரச்சாரக் கூட்டம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

அது சமயம் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம், ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதிக் குட்பட்ட NDA கூட்டணியை சார்ந்த அனைத்து கட்சிகளுடைய மாநில, மாவட்ட, மண்டல, ஒன்றிய, கிளை நிர்வாகிகளும், பொது மக்களும் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# திருவள்ளூர் ஸ்ரீ வைத்திய வீரராகவப் பெருமாள் கோயிலில் மாசி அமாவாசையை முன்னிட்டு தெப்ப உற்சவத்தில் திரளான பக்தர்கள் பங்கேற்று சாமி தரிசனம்

திருவள்ளூர் பிப் 19 : திருவள்ளூரில் உள்ள ஸ்ரீ வைத்திய வீரராகவப் பெருமாள் திருக்கோயில் 108 திவ்ய தேசங்களில் மிகவும் பிரசித்திப் பெற்ற திருத்தலமாகும். இக்கோயிலில் அமாவாசை தோறும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்வது வழக்கம். இத்திருக்கோயிலில் ஆண்டுதோறும் மாசி மாத அமாவாசையை முன்னிட்டு மூன்று நாட்கள் பெருமாள் மற்றும் தாயார் முத்தங்கி சேவை மற்றும் தெப்ப உற்சவம் நடைபெறும்.

அதன்படி இந்த ஆண்டுக்கான மாசி மாத தெப்ப உற்சவம் கோலாகலமாக தொடங்கியது. கோயில் அருகில் ஹிருதாப நாசினி என்ற குளம் உள்ளது. சுமார் 7 ஏக்கர் பரப்பளவு கொண்ட இக்குளத்தில், மாசி மாத தெப்ப உற்சவம் நடைபெற்றது. இதில், உற்சவர், ஸ்ரீ வைத்திய வீரராகவப் பெருமாள், ஸ்ரீதேவி, பூதேவி சமேதராக வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்டு, தெப்பத்தில் எழுந்தருளி கோயில் குளத்தை மூன்று முறை வலம் வந்து பக்தர்களுக்கு காட்சி அளித்தார்.நோய் தீர்க்க வேண்டிக் கொண்டு தெப்பத் திருவிழாவில் பெருமாளை தரிசித்தால் நோய் தீரும் என்பதால் திரளான பக்தர்கள் பெருமாளை வழிபட்டனர்.

மூன்று முறை குளத்தை வலம் வந்த பிறகு திருக்கோயில் ஆலயத்திற்கு வீரராகவர் சென்றார். இதற்கான ஏற்பாடுகளை வைத்திய வீரராகவர் திருக்கோயில் நிர்வாகத்தினர் செய்திருந்தனர். இந்த மாசி மாத தெப்பத் திருவிழாவில் திருவள்ளூர் மட்டுமல்லாது பெரியகுப்பம், ஈக்காடு, காக்களூர் மற்றும் சுற்றுவட்டார கிராமங்களைச் சேர்ந்த ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு வீரராகவரை வழிபட்டு சென்றனர்.

# மயான கொள்ளை திருவிழா



வேலூர் மாவட்டம் கருக்கம்பத்தூர் கிராமத்தில் இன்று மாசி அமாவாசை சிவராத்திரி தொடர்ந்து ஸ்ரீ அங்காளம்மன் மயான கொள்ளை திருவிழாவில் அம்மன் வேடமிட்டு பக்தர்கள் கோவிலில் வழிபாடு நடத்தி அங்கிருந்து புறப்பட்டு மயானத்திற்கு சென்றடைந்த அம்மனை ஏராளமான பொதுமக்கள் அங்காளம்மன் தரிசித்தனர்

# மேல்சித்தாமூர் வட்டார மருத்துவ அலுவலரை பணியிட மாறுதல் செய்ததை ரத்து செய்ய கோரி மருத்துவர்கள், செவிலியர்கள், உள்ளிருப்பு போராட்டம்




செஞ்சி பிப் 19

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த மேல்சித்தாமூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மூன்று ஆண்டுகளாக வட்டார மருத்துவ அலுவலராக பத்மஷா வட்டார மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வருகிறார்.

மாவட்ட சுகாதார அலுவலகம் சார்பில் இவரை பணியிட மாற்றம் செய்தும் வளத்தி வட்டார மருத்துவ அலுவலர் வெங்கடேசன் என்பவரை மேல்சித்தாமூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மாற்றப்பட்டு உத்தரவு வழங்கி உள்ளனர்.

இதனால் வட்டார மருத்துவ அலுவலராக பணிபுரிந்து வந்த பத்மஷாவை பணியிட மாறுதல் செய்ததை ரத்து செய்ய வேண்டியும், இவரையே இந்த மருத்துவமனைக்கு பணிபுரிய வேண்டு என வலியுறுத்தி மேல்சித்தாமூர் வட்டாரத்தில் பணிபுரியும் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் என 70பேர் பணி புறக்கணிப்பு செய்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அப்போது வட்டார மருத்துவ அலுவலர் மீண்டும் வேண்டும் அவரை மாற்றக்கூடாது.. மாற்றத்திற்கு உண்டான காரணத்தை கூறுங்கள் என கோஷங்கள் எழுப்பி போராட்டம் செய்தனர்.

மேல்சித்தமூர் அரசு ஆரம்ப சுகாதார நிலைய செவிலியர்கள், மருத்துவர்கள் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்து வருவதால் பரபரப்பு நிலவி வரும் சூழ்நிலையில். மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் ஆர்ப்பாட்டத்தால் மருத்துவ சேவை பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தமிழக அரசு சுகாதாரத் துறையில்

சிறப்பாக பணியாற்றி வரும் அரசு ஊழியர்களை தொடர்ந்து பணி மாறுதல் செய்வது வாடிக்கையாகி வருவதாகவும் அரசு ஊழியர்கள் குற்றம் சாட்டுகின்றனர்



வேலூர் புதிய பேருந்து நிலையம் பாலாற்றங்கரையில் அமைந்துள்ள ஸ்ரீ அங்காளம்மன் ஆலயத்தின் 13 ஆம் ஆண்டு மயான கொள்ளை திருவிழாவை முன்னிட்டு அம்மனுக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டது. இவ்விழாவையொட்டி விழா குழு தலைவர் திருமுருகன் ஏற்பாட்டில் சிறப்பு அன்னதானம் வழங்கப்பட்டது. இதனை வேலூர் அமுதா ப்ராப்பர்ட்டீஸ் நிறுவனர் தொழிலதிபர் ஜி.பரத்குமார் கலந்து கொண்டு அன்னதானம் வழங்கி துவக்கி வைத்தார். உடன் விழா குழுவினர்கள் ஞானராஜ் சதீஷ்குமார் தயாநிதி சசிகுமார் மற்றும் சாமுவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சுமார் 5000க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அன்னதானம் மற்றும் குடிநீர் பாட்டில்கள் வழங்கப்பட்டது.

# போப் ஜான் பால் மிமி கல்வியியல் கல்லூரியில் ஆங்கிலத் துறை புத்தக வெளியீடு: மணக்குள விநாயகர் கல்வி குழுமத் தலைவர் டாக்டர் நாராயணசாமி பங்கேற்பு!




புதுச்சேரி: பிப்.19–

புதுச்சேரி ரெட்டியார்பாளையம் பகுதியில் அமைந்துள்ள போப் ஜான் பால் மிமி கல்வியியல் கல்லூரியின் ஆங்கிலத் துறை சார்பில், புத்தக வெளியீட்டு விழா மற்றும் இலக்கியத் திருவிழா மிகச்சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவிற்கு கல்லூரியின் செயலாளர் அருட்தந்தை டாக்டர் ரிச்சர்ட் தலைமை தாங்கினார். சிறப்பு விருந்தினராக அருட்தந்தை டாக்டர் டோமினிக் மற்றும் மணக்குள விநாயகர் கல்வி குழுமத் தலைவரும் (Chairman), பிரபல சமூக சேவகருமான டாக்டர் நாராயணசாமி ஆகியோர் கலந்துகொண்டு விழா வினைச் சிறப்பித்தனர்.

கல்லூரி முதல்வர் அலெக்சாண்டர், துணை முதல்வர் ஐடா சேவியர் மற்றும் ஆங்கிலத் துறைத் தலைவி டாக்டர் கிளாரா டோமினிக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவின் முக்கிய நிகழ்வாக, ஆங்கிலத் துறை மாணவர்களின் சிறந்த ஆய்வுக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு புத்தகமாக வெளியிடப்பட்டது. இப்புத்தகத்தை டாக்டர் நாராயணசாமி அவர்கள் வெளியிட, அதன் முதல் பிரதியை முன்னாள் துறைத் தலைவி டாக்டர் ஸ்டெல்லா மற்றும் மாணவர்கள் பெற்றுக் கொண்டனர்.

மாணவர்களின் ஆராய்ச்சித் திறனைப் பாராட்டிய சிறப்பு விருந்தினர்கள், அவர்களின் எதிர்கால கல்விப் பணிகளுக்குத் தங்கள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

இலக்கிய விழாவையொட்டி மாணவர்களுக்குப் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டன. இதில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்குச் சிறப்புப் பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஆங்கிலத் துறை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து இந்த விழாவினைச் சிறப்பான முறையில் ஒருங்கிணைத்து நடத்தினர்.

# அறிவியல் தொழிநுட்பம் மற்றும் சுற்றுசூழல் துறை சார்பாக மரம் நடும் நிகழ்ச்சி: எதிர்க்கட்சித் தலைவர் சிவா துவக்கி வைத்தார்!





புதுச்சேரி பிப்.19–

புதுச்சேரி அரசு அறிவியல் தொழிநுட்பம் மற்றும் சுற்றுசூழல் துறை சார்பாக மரம் நடும் நிகழ்ச்சி நேற்று 18.02.2026 காலை வில்லியனூர் தொகுதி ஓதியம்பட்டு காசி விஸ்வநாதர் கோவிலுக்கு சொந்தமான இடத்தில் நடைபெற்றது.

இந்த மரம் நடும் நிகழ்ச்சியில் வில்லியனூர் சட்டமன்ற உறுப்பினரும், மாநில எதிர்க்கட்சித் தலைவருமான திருமிகு. இரா. சிவா அவர்கள் தலைமை தாங்கி நிகழ்ச்சியை துவக்கி வைத்தார். புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழு உறுப்பினர் செயலர் டாக்டர் ரமேஷ், கோவில் நிர்வாகிகள் குலசேகரன், வெங்கடேஸ்வரன் ஊர் முக்கியஸ்தர்கள் திருவேங்கடம், ஹரிகிருஷ்ணன், மாரிமுத்து, சேகர், கலியபெருமாள், சொக்கலிங்கம், கோவிந்தன், சந்தோஷ், நாகமுத்து ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்தநிகழ்ச்சியுள் நடப்பட்ட அணைத்து மரங்களும் நிணிளி ஜிணீரீ முறையில் பதிவு செய்யப்பட்டு, அவற்றின் வவளர்ச்சி தொடர்ந்து கண்காணிக்கப்படும். இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை புதுச்சேரி மாசுக்கட்டுப்பாட்டு குழு திட்ட அலுவலர்கள் இளங்கோ, சாந்தலட்சுமி மற்றும் ஸ்ரீநிவாசன் ஆகியோர் ஒருங்கிணைத்தனர்.

## புதுச்சேரியில் சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் 167வது பிறந்தநாள் விழா

# ஆளுநர், முதலமைச்சர், சபாநாயகர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் திரளாக மரியாதை!





புதுச்சேரி, பிப். 19,

இந்தியாவின் முதல் மே தினத்தைக் கொண்டாடியவரும், பொதுவுடைமைச் சிந்தனையாளருமான சிந்தனைச் சிற்பி ம. சிங்காரவேலர் அவர்களின் 167 வது பிறந்தநாளை முன்னிட்டு, புதுச்சேரி கடலூர் சாலையில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு நேற்று அரசு சார்பில் சிறப்பான மரியாதை செலுத்தப் பட்டது.

இந்நிகழ்ச்சியில் கே. கைலாஷ்நாதன், துணைநிலை ஆளுநர். என். ரங்கசாமி, முதலமைச்சர். ஆர். செல்வம், சட்டப் பேரவைத் தலைவர் (சபாநாயகர்). அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டப் பேரவைத் துணைத் தலைவர், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகள். அரசு மரியாதையைத் தொடர்ந்து, காங்கிரஸ் மற்றும் திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகள் திரளாக வந்து மரியாதை செலுத்தினர்: முன்னாள் முதலமைச்சர் நாராயணசாமி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் வைத்திலிங்கம் ஆகியோர் தலைமையில் கட்சி நிர்வாகிகள் சிலைக்கு மாலை அணிவித்துத் தங்கள் மரியாதையைத் தெரிவித்தனர்.

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சிவா தலைமையில், சட்டமன்ற உறுப்பினர்கள் அனிபால் கென்னடி, கோபால், மற்றும் செந்தில் (எ) ரமேஷ் ஐயர் உள்ளிட்ட திமுக நிர்வாகிகள் அனைவரும் ஒருசேர வந்து சிங்காரவேலர் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர். மீனவர் சமூகத்தின் முன்னேற்றத்திற்காகவும், சமூக நீதி மற்றும் தொழிலாளர் உரிமைகளுக்காகவும் பாடுபட்ட சிங்காரவேலரின் புகழைப் போற்றும் வகையில், அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றிணைந்து இந்த விழாவில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது.







புதுச்சேரி நகராட்சி வாரிசுதாரர்கள் சார்பாக நேற்று ஆறாவது நாளாக உள்ளாட்சித் துறை அலுவலகம் வாயில் முன்பு காத்திருப்பு போராட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது சுமார் 18 ஆண்டுகளாக புதுச்சேரி நகராட்சியில் வாரிசு பணிகள் வழங்கப்படாமல் நிலுவையில் உள்ளது. விண்ணப்பித்து தகுதி உள்ள 123 நபர்கள் தேர்வு செய்து பட்டியலிருந்து கோப்பு அனுப்பப்படாமல் உள்ளது.இதனை கண்டிக்கும் விதமாக நாங்கள் பல கட்ட போராட்டங்களையும் அதிகாரிகளும் பேச்சு வார்த்தையும் துறை சார்ந்த மந்திரி இடமும் முதல்வர் அவர்களிடமும் பலமுறை சந்தித்து எங்களை நியாயமான கோரிக்கை வெற்றியடைய பேச்சு வார்த்தை நடத்தி இருக்கிறோம் ஆனால் இதனால் வரையில் எங்களது கோரிக்கையானது நிறைவேற்றப்படாமல் காலதாமதம் செய்து வருகிறது இந்த அரசு ஆகவே இனி மேலும் இந்த அரசு இந்த உள்ளாட்சித் துறை நிர்வாகம் எங்களது கோரிக்கையை நிறைவேற்றவில்லை என்றால் மேலும் எங்களது வாரிசுதாரர்களை திரட்டி இன்னும் தீவிரமான போராட்டங்களை நடத்துவது என எங்கள் வாரிசுதாரர்கள் சார்பில் முடிவு செய்துள்ளோம்.

## மாம்பட்டு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஊஞ்சல் தாலாட்டு வைபவம்..!



திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த மாம்பட்டு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலில் அமாவாசை சிறப்பு பூஜைகள் வெகு விமரிசையாக நடைபெற்றது. மேலும் மூல மூர்த்திகளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடந்தேறியது. பிறகு யாகசாலை பூஜைகள் நடைபெற்றன. இரவு ஊஞ்சல் தாலாட்டு வைபவம் பக்தர்கள் முன்னிலையில் நடைபெற்றது. பிறகு உற்சவ மூர்த்தி புஷ்ப அலங்காரத்தில் மேளதாளத்துடன் கோவில் பிரகாரத்தில் வீதியுலா வந்தார். இந்த வைபவத்தில் சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர். பங்கேற்ற அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. சக்தி உபாசகர் அருட்சக்தி ஆறு.லட்சுமணன் ஸ்வாமிகள் பூஜை முறைகளை மேற்கொண்டார்.




புதுச்சேரி பாரதிய ஜனதா கட்சியின் சார்பாக 17/02/26 செவ்வாய் கிழமை மாலை,புதுவை, ஹோட்டல் ராம் இன்டர்நேஷனல்_ இல் கட்டுமான பொறியாளர்கள்,கட்டுமான கலைஞர்கள், கான்ட்ராக்டர்கள், மற்றும், அத்துறை சார்ந்த நிபுணர்கள், கலந்து கொண்ட ,2026 சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, கருத்து கேட்பு மற்றும் கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது. பில்டர்ஸ் அசோசியேஷன் ஆஃப் இந்தியா (BAI) பாண்டிச்சேரி சிவில் இன்ஜினியர்ஸ் அசோசியேஷன் (PONCEA), இந்தியன் கான்கிரீட் இன்ஸ்டிடியூஷன்,(ICI), அசோசியேஷன் ஆஃப் கன்சல்டிங் இன்ஜினியர்ஸ் இந்திய(ACCI), மற்றும் FACEAT &P , ஆகிய சங்கங்களின் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டு, தங்களின்,கோரிக்கைகளையும், மேலான ஆலோசனைகளையும் தெரிவித்தனர். சிறப்பு வாய்ந்த இக் கூட்டத்திற்கு, சபாநாயகர் , எம்பலம் செல்வம் அவர்கள் சிறப்பு அழைப்பளராக கலந்துகொண்டு அனைவரின் கருத்துகளையும், கேட்டு, நியாமான அனைத்து கோரிக்கைகளையும், நிவர்த்தி செய்வதாக உறுதி அளித்தார். மற்றும், பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் .V.P. ராமலிங்கம் Ex.MLA அவர்கள் தலைமை ஏற்று நோக்க உரையாற்றினார். முன்னதாக, அறிவு சார் பிரிவு தலைவர்.Er.N.J.L. ரமேஷ், அனைவரையும் வரவேற்று பேசினார். NDA அரசின் சாதனைகளை முன்னாள் MLA அசோக் பாபு எடுத்துரைத்தார். நிறைவாக முன்னாள் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் மற்றும் பாஜக மாநில செயற்குழு உறுப்பினர் Er. M. செல்வராஜ் நன்றியுரை ஆற்றினார். புதுவை சார்,பொறியாளர்கள்,கட்டுமான கலைஞர்கள், கான்ட்ராக்டர்கள், அனைவரும் இந்த அரசு தொடர ஏக மனதாக ஆதரவு அளித்தனர்.

# அய்யலூரில் வனத்துறையினரை கண்டித்து 20க்கும் மேற்பட்ட கிராம மக்கள் வேட்டை நாய்களுடன் சாலை மறியல்



திண்டுக்கல் பிப்,19

திண்டுக்கல் மாவட்டம் அய்யலூரில் திண்டுக்கல் திருச்சி தேசிய நெடுஞ் சாலையில் இருபுறமும் பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர்.

அய்யலூர் அதனை சுற்றியுள்ள கிராமப்புறங்களில் உள்ள தெய்வங்களுக்கு திருவிழா நேரங்களில் வனப்பகுதிகளில் வேட்டையாட சென்று வருவது வழக்கம் அவ்வாறு வேட்டையாடிய பொருள்களை தெய்வங்களுக்கு வைத்து வழிபாடு செய்வது வழக்கம். அவ்வாறு வேட்டையாட சென்ற நபர்களை வனத்துறையினர் கைது செய்யப்பட்டதாகவும் பின்னர் அவர்களை எச்சரிக்கை செய்யப்பட்டு அனுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

இதனால் வனத்துறையினரை கண்டித்து 20க்கும் மேற்பட்ட கிராமத்தை சேர்ந்த பொதுமக்கள் வேட்டை நாய்களுடன் வேட்டையாடிய பொருட்களுடன் சாலை மறியலில் ஈடுபட்டுள்ளனர். இதனால் திண்டுக்கல் திருச்சி சாலைகள் ஒரு மணி நேரத்திற்கு மேல் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது சம்பந்தப்பட்ட இடத்திற்கு விரைந்து வந்த வடமதுரை காவல் நிலைய ஆய்வாளர் நிதிகுமார் தலைமையிலான போலீசார் சாலை மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தி கலைந்து சென்றனர்.

# சேலத்தில் லவ் டார்ச்சரால் புடவையில் தூக்கிட்டு ஆசிரியை தற்கொலை: சிக்கியது 4 பக்க தற்கொலை கடிதம்



சேலம். பிப்.19–

என் சாவுக்கு காரணம் கௌதம் லவ் டார்ச்சரால் புடவையில் தூக்கிட்டு ஆசிரியை தற்கொலை சிக்கியது 4 பக்க தற்கொலை கடிதம்.

சேலம் மாவட்டம் இளம்பிள்ளை அருகே உள்ளது அழகனூர் ஆசாரி பட்டறை. இந்த பகுதியைச் சேர்ந்தவர் விஜயலட்சுமி.

இவரது கணவர் இறந்துவிட்டார். இவரது மகள் சண்முகப்பிரியா ( 22 ) பிஇ அக்ரி படித்துவிட்டு தற்போது தனியார் பள்ளி ஒன்றில் ஆசிரியையாக சண்முகப்பிரியா வேலைக்கு சென்று வந்துள்ளார்.

இதனிடையே சண்முகப்பிரியா நாமக்கல் மாவட்டத்தில் உள்ள தனியார் கல்லூரியில் (ஞானமணி கல்லூரி) படிக்கும்போது சேலம் மாவட்டம் நங்கவள்ளி அருகேயுள்ள அமரகுந்தி பகுதியைச் சேர்ந்த கௌதம் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு பின்னர் இருவரும் காதலித்து வந்ததாக கூறப்படுகிறது. இந்நிலையில் சில மாதங்களில்

கௌதமின் நடவடிக்கை சரியில்லாததால் சண்முகப்பிரியா காதலை கைவிட்டு இருப்பினும் தொடர்ந்து கௌதம் சண்முகப்பிரியாவிற்கு காதல் டார்ச்சர் கொடுத்து வந்ததாகவும் செல்போனில் மிரட்டியதாகவும் கூறப்படுகிறது.

மேலும் இருவரும் சேர்ந்து எடுத்துள்ள புகைப்படங்களை சமூக வலைத்தளமான இன்ஸ்டாகிராமில் பதிவிட்டு விடுவேன் என கூறி சண்முகப்பிரியாவை கௌதம் மிரட்டி வந்ததாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில் சண்முகப்பிரியாவிற்கு உறவினர்கள் மாப்பிள்ளை பார்த்து வந்தனர். இதனை அறிந்த கௌதம் திருமணத்தை தடுக்க தொடர்ந்து முயற்சி செய்து வந்ததாகவும் கூறப்படுகிறது.

இதனால் மன உளைச்சலில் இருந்து வந்த சண்முகப்பிரியா அவரது வீட்டில் சேலையால் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார். இச்சம்பவம் குறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற மகுடஞ்சாவடி போலீசார் சண்முகப்பிரியாவின் சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சங்ககிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

மேலும் சண்முகப்பிரியா தனது சாவிற்கு கௌதம் தான் காரணம். அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஆங்கிலத்தில் நான்கு பக்க கடிதம் எழுதி வைத்துள்ளார். இதனை மகுடஞ்சாவடி போலீசார் கைப்பற்றியுள்ளனர். சந்தேக மரணம் என முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ள போலீசார் சண்முகப் பிரியாவின் செல் போன் மற்றும் கடிதத்தை கைப்பற்றி தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இளம்பிள்ளை அருகே லவ் டார்ச்சர் காரணத்தால் தனியார் பள்ளி ஆசிரியை ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தையும், பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.



இந்து சமய அறநிலையத்துறை

# அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயில்

மேல்மலையனூர் (ம) விழுப்புரம் மாவட்டம்.



நிகழும் மங்களகரமான விசுவாவசு வருடம் மாசி மாதம் 3-ந் தேதி (15.02.2026) ஞாயிற்றுக்கிழமை முதல் மாசி மாதம்-15-ம் தேதி (27.02.2026) வெள்ளிக்கிழமை முடிய 13 நாட்கள் மாசிப்பெருவிழா வெகுசிறப்பாக நடைபெறும், இப்பெருவிழாவில் பக்த கோடி அன்பர்கள் சேவை பிரார்த்தனை செலுத்தி அம்மனின் திருவருள் பெற்றுய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

| வ.எண் | ஆங்கில தேதி | தமிழ் தேதி | கிழமை | விழா விபரம் |
|---|---|---|---|---|
| 1. | 19.02.2026 | மாசி–7 | வியாழன் | தீமிதி விழா |
| 2. | 21.02.2026 | மாசி–9 | சனி | திருத்தேர் வடம்பிடித்தல் |
| 3. | 23.02.2026 | மாசி–11 | திங்கள் | சத்தாபரணம் |
| 4. | 24.02.2026 | மாசி–12 | செவ்வாய் | தெப்பல் உற்சவம் |
| 5. | 27.02.2026 | மாசி –15 | வெள்ளி | காப்பு களைதல் |

1. திருக்கோயிலில் நடைபெறும் அன்னதான திட்டத்தில் நாள்–1 க்கு ரூ.35,000/– ம் செலுத்தி, 1000 நபர்களுக்கு தாங்கள் விரும்பும் நாளில் அன்னதானம் வழங்க நன்கொடையாளர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.

2. தீமிதி விழாவில் பங்கு கொள்பவர்கள் குறைந்தது 7– நாட்கள் விரதம் இருக்க வேண்டும்.

**அனைவரும் வருக, அம்மன் அருள் பெறுக**

திரு. **த.ஏழுமலை (எ) சேட்டு பூசாரி** அறங்காவலர், குழுத்தலைவர்,
திரு. **ஏ.சுரேஷ் பூசாரி** அறங்காவலர்,
திரு .**பா.மதியமுகன் பூசாரி,** M.A.,B.Ed., அறங்காவலர்,
திரு. **சி.பச்சையப்பன் பூசாரி,** அறங்காவலர்.

திரு. **மூ.சக்திவேல்** B.A.B.L., உதவி ஆணையர் / செயல் அலுவலர்,
திரு. **ம.சரவணன் பூசாரி,** அறங்காவலர்,
திரு. **ரா.மு.வடிவேல் பூசாரி,** அறங்காவலர்,
திரு. **வ.சந்தானம் பூசாரி,** அறங்காவலர்,


# மீஞ்சூர், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மீஞ்சூர் பேரூராட்சி ஆகிய பாதைகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகள்

## மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு



திருவள்ளூர் பிப் 19 :

மீஞ்சூர், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மீஞ்சூர் பேரூராட்சி ஆகிய பாதைகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை துரிதமாக மேற்கொள்ள சம்பந்தப் பட்ட துறை அலுவலர்களிடம் உத்தரவிட்டார்

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் ஊராட்சி ஒன்றியம், நந்தியம்பாக்கம் ஊராட்சியில் நெடுஞ்சாலைகள் துறை சார்பில் ரூ.44.5 கோடி மதிப்பீட்டில் அத்திப்பட்டு நந்தியம்பாக்கம் இடையே கட்டடப்பட்டு வரும் மேம்பாலப் பணிகளையும், மீஞ்சூர் ஊராட்சியில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆகிய துறைகள் சார்பில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டடப்பட்டு வரும் முதலமைச்சரின் சிறு விளையாட்டு அரங்க கட்டட கட்டுமான பணிகளையும், மீஞ்சூர் பேரூராட்சி பகுதியில் பேரூராட்சி துறை சார்பில் ரூ.1.55 கோடி மதிப்பீட்டில் கட்டடப் பட்டு வரும் அறிவுச்சார் மையம் மற்றும் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் தாமரைகுளம் சுற்றி நடைபாதை மற்றும் பூங்கா கட்டுமான பணிகளையும் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை துரிதமாக மேற்கொள்ள சம்பந்தப் பட்ட துறை அலுவலர் களிடம் உத்தரவிட்டார்.

அதனைத்தொடர்ந்து, வேப்பம்பட்டில் நெடுஞ்சாலைகள் துறை சார்பில் ரூ.56 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் கடவு எண் 13 கட்டுமானப் பணிகளையும், செவ்வாய்பேட்டையில் ரூ.8.1 கோடி மதிப்பீட்டில் இரயில்வே மேம்பாலம் கடவு எண் 15 கட்டுமானப் பணிகளையும் மாவட்ட ஆட்சியர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், திருவள்ளூர் ஊராட்சி ஒன்றியம், காக்களூர் ஊராட்சி காக்களூர் ஏரி பகுதியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.2.51 கோடி மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு வரும் பணிகளையும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை ஆகிய துறைகள் சார்பில் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் முதலமைச்சரின் சிறிய விளையாட்டு அரங்க கட்டட கட்டுமான பணிகளையும் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணிகளை துரிதமாக மேற்கொள்ள சம்பந்தப் பட்ட அலுவலர்களிடம் உத்தரவிட்டார்.

இதில் மீஞ்சூர் பேரூராட்சி தலைவர் ருக்மணி மோகன்ராஜ், உதவிசெயற்பொறியாளர் கஜலட்சுமி, மீஞ்சூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ரவி, குணசேகரன், உதவி பொறியாளர்கள் யாஸ்மின், நரசிம்மன், ஐசக் கெவின், மீஞ்சூர் பேரூராட்சி செயல் அலுவலர் மகேஷ்வரி, செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) தணிகாச்சலம், திருவள்ளூர் வட்டார வளர்ச்சி அலுவலர் பி.செல்வகுமார், உதவி செயற்பொறியாளர் கோவேந்தன், திருவள்ளூர் வட்டாட்சியர் பாலாஜி, உதவி பொறியாளர், நெடுஞ்சாலைகள் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# 141 திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையயங்களில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் நேரில் ஆய்வு



திருச்சி, பிப்.19–

திருச்சிராப்பள்ளி மாவட்டம், 139 ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதி மற்றும் 141 திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற தொகுதிகளில் உள்ள ஒரே அமைவிடத்தில் அதிக வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள 14 மையங்களில் உள்ள வாக்குச்சாவடி மைய கட்டிடங்களின் உறுதித்தன்மை, அடிப்படை வசதிகள், வாக்காளர்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் மற்றும் சட்டம், ஒழுங்கு தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன் ஆய்வு மேற்கொண்டு, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

எதிர்வரும் சட்டமன்ற தேர்தல், 2026 இன் முன்னேற்பாடாக இந்திய தேர்தல் ஆணைய அறிவுறுத்தலின்படி 139 ஸ்ரீரங்கம் மற்றும் 141 திருச்சிராப்பள்ளி (கிழக்கு) ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் கீழ் கண்டுள்ளவாறு ஒரே அமைவிடத்தில் அதிக வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள அமைவிடங்களில் தேர்தல் நாளன்று வாக்காளர்கள் நீண்ட நேரம் காத்திருத்தலை தவிர்த்து, விரைவாகவும், பாதுகாப்பாகவும் வாக்களித்திடும் பொருட்டு வரிசை மேலாண்மை, வாக்குச்சாவடி மையங்களில் அமைக்கப்பட்டுள்ள அடிப்படை வசதிகள், மற்றும் சட்டம் ஒழுங்கு மேலாண்மை தொடர்பாக 139 ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட விக்னேஷ் ஸ்ரீரங்கா மெட்ரிக்குலேஷன் மேல்நிலைப்பள்ளி, ராகவேந்திரபுரம், ஸ்ரீரங்கம், ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நெல்சன் ரோடு, திருவானைக்கோவில் ஆகிய இடங்களிலும், 141 திருச்சிராப்பள்ளி கிழக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட இ.ஆர்;.மேல்நிலைப்பள்ளி, செயிண்ட் ஜோசப் கல்லூரி மேல்நிலைப்பள்ளி சத்திரம் பஸ் ஸ்டாண்ட், ஹோலிகிராஸ் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மதுரை ரோடு, வைகவுண்ட் கவுஸ் அரசு முஸ்லீம் பெண்கள் மேல்நிலைப்பள்ளி இ.பி.ரோடு, மாநராட்சி உயர்நிலைப்பள்ளி இ.பி.ரோடு, அலங்க விலாஸ் நடுநிலைப்பள்ளி வடக்கு தாராநல்லூர், ஆர;.சி.செயிண்ட் சேவியர் தொடக்கப் பள்ளி வரகனேரி பஜார் திருச்சிராப்பள்ளி, மாநராட்சி நடுநிலைப் பள்ளி செங்குளம், யு.ஆ.சு.ஊ. மேல்நிலைப் பள்ளி புதுக்கோட்டை ரோடு செம்பட்டு, மாநராட்சி நடுநிலைப் பள்ளி சுப்பிரமணியபுரம்;, ஆர்;.சி.ஆதிமூலம் நடுநிலைப்பள்ளி சுப்பிரமணியபுரம், மாநகராட்சி நடுநிலைப் பள்ளி கே.கே.நகர் ஆகிய இடங்களிலும் மாவட்ட தேர்தல் அலுவலர் ஃ மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.வே.சரவணன் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டு, தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அலுவலர்களுக்கு ஆலோசனை வழங்கினார்.

இந்நிகழ்வின் போது மாநகர காவல் ஆணையர் காமினி அவர்கள், தேர்தல் நடத்தும் அலுவலர்கள், திரு.சீனிவாசன், திருமதி. ஜெயந்தி மற்றும் உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், காவல் துறையினர், அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

# தேசிய அளவில் நடைபெறும் பாராவாலி ஒலிம்பிக் வாலிபால் போட்டி.. உ. பிக்கு செல்லும் தமிழ்நாடு அணியில் மாற்றுத்திறனாளி வீரர்கள்..



ஈரோடு. பிப். 19

உத்தரப்பிரதேசத்தில் நடைபெறும் மாற்றுத்திறனாளிகளுக்கான பாராவளி ஒலிம்பிக் வாலிபால் போட்டியில் பங்கேற்க தமிழ்நாட்டில் இருந்து 14 மாற்று திறனாளி வீரர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

இந்திய அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கான பாராவளி ஒலிம்பிக் வாலிபால் போட்டிகள் பல்வேறு மாநிலங்களில் ஆண்டுதோறும் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, தமிழ்நாடு பாராவாலி அசோசியேசன் மற்றும் ஈரோடு மாவட்ட பாராவாலி அசோசியேசன் மற்றும் ஈரோடு தயா அறக்கட்டளை இணைந்து இந்த மாற்று திறனாளிகளுக்கான பாரா வாலி ஒலிம்பிக் வாலிபால் போர்டிகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சிட்டிங் வாலிபால் போட்டிகளை தமிழ்நாடு அளவில் நடத்தி, தேசியப் போட்டிக்கு மாற்றுத் திறனாளி வீரர்களை ஊக்கப்படுத்தி தேர்வு செய்து வருகின்றனர்.

அதன்படி மாற்றுத் திறனாளி வீரர்கள் பங்கேற்கும் தேசிய அளவிலான பாராவாலி ஒலிம்பிக் வாலிபால் போட்டிக்கான வீரர்களை தேர்வு செய்யும் தேர்வு போட்டி கடந்த, மாதம் ஜனவரி 31ஆம் தேதி இந்துஸ்தான் கல்லூரி மலாக மைதானத்தில் நடைபெற்று வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

இந்த நிலையில் தற்போது வருகின்ற பிப்ரவரி 25ஆம் தேதி, உத்தரப்பிரதேச மாநிலத்தில் நடைபெறும் தேசிய அளவிலான பாராபாலி ஒலிம்பிக் வாலிபால் போட்டிகளில் கலந்து கொள்ள தேர்வு செய்யப்பட்ட 14 மாற்றுத்திறனாளி வீரர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள உள்ளனர்.

இதற்கான இறுதி கட்ட பயிற்சி ஈரோடு திண்டல் வேளாளர் கல்லூரி வளாகத்தில் உள்ள மைதானத்தில் வீரர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்த இறுதி போட்டிக்கான பயிற்சியினை, ஈரோடு தயா அறக்கட்டளை மற்றும் ராஜாத்தி அம்மாள் கல்வி அறக்கட்டளை நிறுவனத் தலைவர் டாக்டர் என் எம் பிரதீப் மற்றும் அணியின் பயிற்சியாளர்கள் வீரர்களுக்கு பயிற்சி அளித்தனர்.

தமிழ்நாடு அணியின் சார்பில் பயிற்சியில் கலந்து கொண்ட தேர்வு செய்யப்பட்ட 14 வீரர்களும் வருகின்ற பிப்ரவரி 25ஆம் தேதி உத்தரபிரதேச மாநிலத்தில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்க உள்ளனர்.

# விழுப்புரம் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அழகு மற்றும் செஞ்சி செக்கோவர் நிறுவனம் சார்பில் குழந்தை திருமணம் தடை சட்டம் குறித்து ஒரு நாள் பயிற்சி



செஞ்சி பிப் 19

விழுப்புரம் மாவட்டம் குழந்தைகள் பாதுகாப்பு அலகு மற்றும் செஞ்சி செக்கோவர் நிறுவனமும் இணைந்து செஞ்சி மேல்மலையனூர் வல்லம் ஆகிய ஒன்றியங்களில் உள்ள திருமண மண்டப உரிமையாளர் நல சங்க உறுப்பினர்களுக்கு குழந்தை திருமணம் தடைச் சட்டம் 2006 குறித்து ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது .இப்பயிற்சி செக்கோவர் நிறுவன இயக்குனர் அம்பிகா சூசைராஜ் தலைமையிலும் வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜ் முன்னிலையில் வகித்தனர். சிறப்பு விருந்தினர்களாக ஆறுமுகம் பச்சையப்பன் தலைமை காவலர் வருவாய்துறை சார்ந்த குமார் பயிற்றுனராக மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அழகு அலுவலர் தாமோதரன் திருமண மண்டப உரிமையாளர் நலச் சங்க தலைவர் பன்னீர்செல்வம் பொருளாளர் முருகன் செக்கோவர் அலுவலர்கள் ரவீந்திரன் குலசேகர் சுரேஷ் பாபு ராஜசேகர் ஆகியோர் கலந்து கொண்டு பயிற்சியை சிறப்பித்தனர். பயிற்சியில் 30 திருமண உரிமையாளர்கள் கலந்து கொண்டனர்.





VBGRAMG (MGNREGA) திட்டத்தை பற்றி ஒரு கருத்துரை வழங்க புதுச்சேரியில் உள்ள பெரியார் படிப்பகத்தில், AIPF ஒருங்கிணைப்பில் எனக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டது. தோழர் லியாகத் அலி தலைமையில் மற்றும் தோழர் சோ. பாலசுப்பிரமணியன் போன்றோர்களின் முன்னைலையில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் இந்த திட்டத்தினால் ஏற்படும் நன்மைகள், தீமைகள், சட்ட சிக்கல், மாநில சுயாட்சி, கிராம பஞ்சாயத்திற்கு விடுக்கப்பட்ட சவால், பொருளாதார சிக்கல், நடைமுறை சாத்தியமற்றவைகள் போன்றவைகள் எடுத்துரைத்தேன்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421